**செய்தி வெளியீடு எண்:482** **நாள் : 05.10.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் இன்று 05.10.2015 தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பால் வளத்திட்டங்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணப் பட்டுவாடா மற்றும் பால் பொருட்கள் விற்பனை குறித்து ஆவின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார். இந்த கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால் வளத்துறையின் வளர்ச்சிக்காக, கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 409 கோடியும், இந்த நிதி ஆண்டில் பல்வேறு பால்வளத் திட்டங்களுக்காக சட்டப் பேரவை விதி எண் 110இன் கீழ் 120 கோடியே 55 இலட்சம் ரூபாய் அளவிற்கும், பால் வளத் துறை மானியக் கோரிக்கையில், 88 கோடியே 45 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். ஆக மொத்தம், பால்வளத் துறையின் வளர்ச்சிக்காக, இதுவரை 618 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில், பால்வளத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும், திட்டங்களை 31.03.2016க்குள் முடிப்பதற்கான அட்டவணை தயார் செய்து, அதனை செயலாக்க வேண்டும் என்றும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய ஆய்வின் போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பால் வளத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு திட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பால் பணப் பட்டுவாடா குறித்தும் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம் குறிப்பிட்ட காலங்களில் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். ஆவின் பால் பொருட்கள் நுகர்வோர்க்கு தங்குதடையின்றி கிடைக்க சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 240 புதிய சில்லறை விற்பனை கடைகள் திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 2 மாதங்களில் 68 சில்லறை விற்பனை கடைகள் தொடங்கப்பட்டுள்ளன. 16 ஆவின் வட்டார

அலுவலகங்களைச் சார்ந்த பகுதிகளில், 32 பிரத்யேக ஆவின் விற்பனை நிலையங்கள் அமைக்க முடிவெடுக்கப்பட்டு 16 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 35 பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய ஒப்புதல் பெறப்பட்டு, ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை விருகம்பாக்கத்தில் ''**ஆவின் ஜங்ஷன்**'' அதிநவீன பாலகம் விரைவில் திறக்கப்படவுள்ளது. மேலும், சென்னையில் 15 இடங்களில் ஆவின் அதிநவீன பாலகம் அமைக்கப்படவுள்ளது. இதில் பாலவாக்கம், திருவான்மியூர், அசோக் நகர், கிண்டி, பெசண்ட் நகர், தேனாம்பேட்டை (SIET) ஆகிய இடங்களில் இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் ஆவின் அதிநவீன பாலகங்கள் செயல்படத் தொடங்கும் வகையில் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆவின் பால் பொருட்கள் விற்பனை கடந்த ஆண்டு ஏப்ரல் – செப்டம்பர் மாதங்களை ஒப்பிட்டு நோக்கும் போது, இந்த ஆண்டு அதே காலக் கட்டத்தில் 21 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பண்டிகைக் காலங்களை முன்னிட்டு கடந்த மாதம் தொழிலாளர்கள் சிக்கன நாணய சங்கங்களின் மூலம் ஆவின் பால் பொருட்களுக்கு கிடைக்கப்பெற்ற முன்பதிவு ஆர்டர் ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் ஆகும். மேலும், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கான ஆர்டர் தீபாவளி பண்டிகைக்கு முன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆவின் நிறுவனம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ள ''கிஃப்ட் பேக்'' நுகர்வோரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து, ஆவின் ''கிஃப்ட் பேக்'' அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் தங்குதடையின்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் புதிய வகை இனிப்புகளை நுகர்வோர் விரும்பும் வகையில் தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆவின் பால்பொருட்கள் விற்பனையை மேலும் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

புதிய மாதந்திர பால் அட்டைகள் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப 16 வட்டார அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. நுகர்வோர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் இருப்பிட சான்றிதழ் நகல் அளித்து பால் அட்டைகளை உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். மேலும்,

அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் நுகர்வோர் வசதிக்காக ஆவின் நிறுவனம் 16 குழுக்களை அமைத்து புதிய பால் அட்டைகளை வழங்கி வருகிறது. பிரதி மாதம் 15ஆம் தேதிக்குப் பிறகு வரும் சனிக்கிழமைகளில் இந்தக்குழு அடுக்குமாடி குடியிருப்புப் பகுதிகளுக்கு நேரில் சென்று விண்ணப்பங்களைப் பெற்று, உடனடியாக பால் அட்டைகளை வழங்கி வருகிறது.

நுகர்வோர்கள் தங்கள் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க ஆவின் 24 மணிநேர நுகர்வோர் நலன் மற்றும் கூஷ;சேவைப்பிரிவை 1800 425 3300 (இலவச சேவை) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இந்த ஆய்வுக்கூட்டத்தில் இணை நிர்வாக இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி, இ.ஆ.ப., துணைப் பால் ஆணையர் திரு எஸ்.துரைசாமி, கூடுதல் இயக்குனர் திரு எஸ்.ஜெயக்குமார், பொது மேலாளர் (பணிக்குழு) திரு பி.பிரபாகர், பொது மேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு, பொது மேலாளர் (திட்டம்) திரு சி.லோகிதாஸ், பொதுமேலாளர் திரு சி.ரவி மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**